# 31

## அன்னை ஆயிஷா (ரழி)

**ஹப்ஸா :** அஸ்ஸலாமு அலைக்கும் மர்யம்

**மர்யம் :** வஅலைக்குமுஸ்ஸலாம் ஹப்ஸா. இவ்வளவு அவசரமாக எங்கே போய் வருகிறீர்கள்?

**ஹப்ஸா :** எங்களுக்கு குர்ஆன் ஓதக் கற்பிக்கும் மௌலவியா ஆமினா அவர்களின் வீட்டுக்குச் சென்று வருகிறேன்.

**மர்யம் :** என்ன முக்கியமான தேவை?

**ஹப்ஸா :** எங்கள் இஸ்லாம் டீச்சர் உம்மஹாத்துல் மு.்.மினீன்களில் ஒருவரான அன்னை ஆயிஷா (ரழி) பற்றிய தகவல்களைச் சேகரித்து வருமாறு கூறியுள்ளார்.

**மர்யம் :** உம்மஹாத்துல் மு.்.மினீன் என்றால்...?

**ஹப்ஸா :** மு.்.மின்களின் தாய்மார்கள் என்பது இதன் பொருளாகும். நபி r அவர்களின் மனைவியர்கள் அனைவரும் மு.்.மின்களின் தாய்மார்கள் ஆவர்.

**மர்யம் :** ஓ... நாங்கள் வெளியே நின்று கொண்டே கதைத்துக் கொண்டிருக்கிறோம். உள்ளே வாருங்கள். எனக்கும் அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள் பற்றி அறிந்து கொள்ள விருப்பமாக இருக்கிறது.

**ஹப்ஸா :** அதற்கென்ன. நான் கேட்டு வந்ததை உங்களுக்கும் சொல்லித் தருகிறேன்.

இவர் அபூபக்ர் (ரழி) அவர்களின் இளைய மகள். இவரது தாய் உம்மு ரும்மான் என்பவராவார். இவர் நுபுவ்வத் 2 ஆம் ஆண்டில் பிறந்தார். நபி r அவர்கள், கதீஜா (ரழி) அவர்கள் வபாத்தானதன் பின்னர் இவர்களை மணமுடித்தார்கள். அப்போது ஆயிஷா (ரழி) அவர்களுக்கு வயது ஒன்பது. நபி r அவர்கள் மணமுடித்த கன்னிப் பெண் இவர் மட்டுமே. ஏனைய மனைவியர் அனைவரும் விதவையர்களாவர்.

**மர்யம் :** ஏன் ஹப்ஸா இவ்வளவு சிறிய வயதில் தனது நண்பனின் மகளை நபியவர்கள் மணம் செய்தார்கள்? அதற்கு அபூபக்ர் (ரழி) அவர்கள் சம்மதம் தெரிவித்தார்களா?

**ஹப்ஸா :** ஆம், அபூபக்ர் (ரழி) அவர்கள் நபியவர்கள் மீது கொண்டிருந்த அன்பின் காரணமாக சம்மதித்தார்கள். அதுமட்டுமல்ல. அக்காலத்தில் தனது சகோதரன் போல் இருந்த ஒருவரின் மகளைத் திருமணம் செய்து கொள்வது சிறந்ததல்ல

என்ற மூட நம்பிக்கை இருந்தது. ஷவ்வால் மாதத்தில் திருமணம் செய்வது சிறந்ததல்ல என்ற மூடநம்பிக்கையும் காணப்பட்டது. இவ்வாறான மூடநம்பிக்கைகளை இல்லாமல் செய்வதற்காவே நபியவர்கள் இவர்களை மணமுடித்தார்கள்.

அத்துடன் இவர் இளம் வயதுடையவராக இருந்ததால் பிற்காலத்தில் பெண்கள் பற்றிய அதிகமான மார்க்க விடயங்களை அறிந்து கொள்ள இலகுவாக இருந்தது.

**மர்யம் :** ஆம்! ஆம்! இப்போது கூட எமக்கு மத்தியில் இவ்வாறான மூடநம்பிக்கைகள் இருக்கத்தான் செய்கின்றன. எங்கள் ஈமானில் உள்ள குறைபாடு காரணமாகவே இவ்வாறான நம்பிக்கைகள் ஏற்படுகின்றன. ஹப்ஸா இன்னும் சொல்லுங்களேன்.

**ஹப்ஸா :** இவர்கள் மிக அழகானவராகவும் பயபக்தி உடையவராகவும் விவேகம் உள்ளவர்களாகவும் இருந்தார். இதனால் பெண்கள் தொடர்பான விடயங்களை சொல்லிக் கொடுப்பதற்கு இவரைப் போன்ற ஒரு பெண் தேவைப்பட்டிருந்தார். ஒரு முறை நபி r அவர்களுடன் யுத்தத்திற்குச் சென்று திரும்பும் வழியில் அன்னை ஆயிஷா (ரழி) அவர்களை தவறுதலாக விட்டு வந்துவிட்டார்கள். அவ்வேளை ஸப்வான் இப்னு முஅத்தல் (ரழி) என்பவர் அவ்வழியே வந்தார். அவர் ஆயிஷா (ரழி) அவர்கள் தனிமையில் இருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். தனது ஒட்டகத்தில் ஏற்றி, மதீனாவிற்கு அழைத்துச் சென்றார். இதனை அறிந்த அப்துல்லாஹ் இப்னு உபை முதலான நயவஞ்சகர்கள் அன்னை ஆயிஷா (ரழி) மீது அவதூறு சொல்ல ஆரம்பித்து விட்டார்கள்.

**மர்யம் :** அவ்வேளை நபி r அவர்கள் என்ன செய்தார்கள்?

**ஹப்ஸா :** அல்லாஹ் மீது பொறுப்புச் சாட்டிவிட்டு பொறுமையாக இருந்தார்கள். அல்லாஹ் அன்னை ஆயிஷா (ரழி) தூய்மையானவர் என்பதை உறுதிப்படுத்தி அல்குர்ஆன் வசனத்தை இறக்கினான்.

**மர்யம் :** அல்லாஹ் எங்களைப் பாதுகாக்க வேண்டும். இன்று எத்தனை பேர் அப்பாவிப் பெண்கள் மீது அவதூறு சொல்லித் திரிகிறார்கள். இவ்வாறு கதைப்பவர்களுக்கு இதுவொரு பாடமாக அமைய வேண்டும். சரி வேறு என்ன விடயங்களை தெரிந்து கொண்டீர்கள்?

**ஹப்ஸா :** இவர்களுக்கு ‘அஸ்ஸித்தீக்கா’, ‘ஹுமைரா’ என்ற சிறப்புப் பெயர்கள் கொடுக்கப்பட்டிருந்தன. துணிவு, வீரம், பொறுமை போன்ற நற்பண்புகள் இவரிடம் காணப்பட்டன. பொதுப் பணி செய்வதில் இவர் மிக்க ஆர்வம் காட்டினார். உஹத் யுத்தத்தின்போது காயமுற்றவர்களுக்கு குடிநீர் வழங்கி உதவினார்கள்.

அது மட்டுமல்ல, இவர்கள் கல்வியிலும் ஞானத்திலும் சிறந்து விளங்கினார்கள். ஸஹாபாக்களுக்கு ஏற்படும் மார்க்கப் பிரச்சினைகளுக்கு தீர்ப்பு வழங்கினார்கள். பெண்கள் தொடர்பான அனேக விடயங்களை நபி r அவர்களிடம் தெரிந்து விளக்கம் கொடுத்தார்கள். நபியவர்களின் வபாத்திற்குப் பின் நீண்ட காலம் வாழ்ந்தார்கள். இஸ்லாத்தைக் கற்பித்தல், மார்க்கத் தீர்ப்பு வழங்குதல்

போன்றவற்றில் ஈடுபட்டார்கள்.

இவை மட்டுமல்ல. இவர்கள் அதிகமாக நோன்பு நோற்பார்கள். அல்குர்ஆனை ஓதுவார்கள். தானதர்மம் செய்வதில் அதிகமாக ஆர்வம் காட்டினார்கள்.

**மர்யம்** : நல்லது ஹப்ஸா, நேரத்தையும் பொருட்படுத்தாது இவ்வளவு சிறந்த விடயங்களைச் சொல்லித் தந்ததற்கு ஜஸாகல்லாஹு ஹைரா.

**பயிற்சி:**

1. உம்முஹாதுல் மு.்.மினீன் எனப்படுவோர் யாவர்?
2. ஆயிஷா (ரழி) அவர்களிடம் காணப்பட்ட முன்மாதிரிகள் சிலவற்றை கூறுங்கள்.
3. ஆயிஷா (ரழி) அவர்கள் இஸ்லாத்திற்காகச் செய்த சேவைகளை பட்டியற்படுத்துங்கள்.